
## திராவிடத்தால் வாழ்கிறோம்

868

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

114

# எம்.கமலநாதன்
## இனிய சகோதரர், இலட்சிய வீரர்!



ஓவியம் : ரவி பேலட்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எம்.கமலநாதன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

1972-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், கழகம் புதிய நெருக்கடி ஒன்றை சந்தித்தது. பல மாவட்டங்களில் இருந்து, முன்னோடிகள் சிலர் கழகத்தில் இருந்து பிரிந்தபோது, கலைஞரின் பக்கம் நின்று 'கலைஞர்தான் கழகம்' என உறுதியாக நின்ற உடன்பிறப்புகள் பலர். அவர்களில், தமிழ்நாட்டின் மேற்கு எல்லையோர மாவட்டமான தர்மபுரியில், கழகத்தினருக்கு நம்பிக்கை அளித்து, கலைஞருக்கு உற்றநண்பராக உடன் நின்றவர் எம்.கமலநாதன்.

'கழகத்திற்குக் கிடைக்கும் வெற்றிகளில் மகிழ்ந்து, வேதனை சோதனைகளில் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நின்று, துவளாமல் இயக்கம் காத்து நின்ற எனதருமைத் தம்பி, இனிய சகோதரர், இலட்சிய வீரன்' என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு எம்.கமலநாதன். மாவட்டக் கழகத்தினரும், நெருங்கிய சகாக்களும் அவரை 'எம்.கே.' என்பார்கள்.

### மாறனின் நட்பில்...

1975-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை அமலானதும், 'இட்லராகிறார் இந்திரா' என முரசொலியில் கார்ட்டூன் வெளியிட்டார் 'முரசொலி' மாறன். கருத்துரிமைக்குக் குரல் கொடுத்த அந்த கார்ட்டூனுக்காக மாறனைக் கைது செய்ய பல லாரிகளில் காவல்துறையினர் வந்து கோபாலபுரத்தில் கலைஞர் வீட்டை முற்றுகை யிட்டனர். "மாறன் டெல்லியில் இருந்து வந்து கொண்டிருக்கிறார். வந்ததும் நானே அனுப்பி வைக்கிறேன்" என கலைஞர் காவல்துறைக்குத் தகவல் அளிக்கிறார். டெல்லியில் இருந்து விமானத்தில் வந்த மாறனுடன், உடன் வந்த கழக எம்.பி. கமலநாதன். நேரடியாக சென்னை வராமல், ஹைதராபாத்தில் இறங்கி, வெவ்வேறு வழிகளில் சென்னை வந்து, தங்கள் தலைவரைக் கண்டு, அவரது வழியனுப்பலில் அவர்கள் மிசா சிறைக்குச் சென்றனர். இப்படி, கழக வரலாற்றில், தர்மபுரி மாவட்டக் கழகத்தின் முன்னோடியாக நினைவில் நிற்பவர் கமலநாதன்.

### 23 வயதில் பொறுப்பு

1931-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் மன்னாஜி ராவ் - கங்காபாய் அம்மாள். சொந்த ஊரான அஞ்சூரில் தொடக்கக் கல்வியும், சேலம் நகராட்சி கல்லூரியில் பட்டப் படிப்பும் முடித்தவர். கல்லூரி காலத்திலேயே கிடைத்த திராவிட இயக்கத் தொடர்புகள், 20 வயதிலேயே கழகத்தில் இணைந்து செயல்பட வைத்தன. 'சேலம் பெரியார்' எனப் போற்றப்பட்ட, கழக முன்னோடி ஜி.பி.சோமசுந்தரம், சேலம் சித்தையன் என இயக்க முன்னோடிகளிடம் அரசியல் பயின்ற கமலநாதன், பேரறிஞர் அண்ணாவின் எழுத்துகள், பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, தர்மபுரி பகுதிகளில் கழகப் பணிகளில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார்.

அரசியல் களத்தில் தீவிரமாக ஈடுபட்ட இளைஞரான கமலநாதன், 1954-ஆம் ஆண்டிலேயே கழகத்தின் சார்பில், அஞ்சூர் ஊராட்சி மன்றத் தலைவர் பொறுப்புக்கு வந்தார். தொடர்ந்து, 1977-ஆம் ஆண்டு வரை அஞ்சூர் ஊராட்சி மன்றத்தின் தலைவராக, மக்களின் நம்பிக்கை பெற்றவராகத் திகழ்ந்தவர். 1960-ஆம் ஆண்டு முதல் 1977-ஆம் ஆண்டு வரை பர்கூர் ஒன்றிய பெருந்தலைவராகவும், பொறுப்பு வகித்தவர்.

1962-ஆம் ஆண்டில், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்கு கழகத்தின் வேட்பாளராக கமலநாதனை அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்றம் நுழைந்த இளையவர்களில் கமலநாதனும் ஒருவர். சட்டமன்றப் பணிகளில் பெற்ற நம்பிக்கை காரணமாக, 1967-ஆம் ஆண்டு தேர்தலின்போது, அவரை கிருஷ்ணகிரி நாடாளுமன்ற மக்களவைத் தொகுதியில் பேரறிஞர் அண்ணா போட்டியிட வைத்தார்.

அண்ணாவின் நம்பிக்கை மட்டுமல்ல; மக்களிடம் கொண்டிருந்த நம்பிக்கையும் அவரை 1967-ஆம் ஆண்டு மக்களவைக்குக் கொண்டு போய் சேர்த்தது. இவரது சிறப்பான நாடாளுமன்றச் செயல்பாடுகளுக்காக 1972-ஆம் ஆண்டில் மாநிலங்களவைக்கு அனுப்பி வைத்தார் கலைஞர்.

> “கழகத் தலைமை இட்ட கட்டளைகளை ஏற்று, களங்கள் பலவற்றைக் கண்ட அவரது இலட்சியப் பற்று என்றுமே மறக்க முடியாதது!”

### நெருக்கடி நிலை காலம்

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், கலைஞரின் தலைமையை ஏற்ற, மாவட்டக் கழக முன்னோடிகளில் கமலநாதன் குறிப்பிடத்தக்கவர். கிளைக் கழகக் கூட்டங்களை நடத்தி, தீர்மானங்களை நிறைவேற்றி தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார். 1972-ஆம் ஆண்டு தொடக்கத்தில் , கழகத்துக்குப் புதிய நெருக்கடி வந்தபோது, கலைஞரின் பக்கம் நின்று 'கலைஞர்தான் கழகம்' என உறுதியாக நின்றவர் கமலநாதன். அதுமட்டுமில்லாமல், 1972-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 17, 18 என இரண்டு நாட்கள், தர்மபுரி மாவட்டக் கழக மாநாட்டினை நடத்தி, கழகத்தில் சிலர் ஏற்படுத்திய குழப்பத்துக்கு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்ற வைத்தார், மாநாட்டின் வரவேற்புக் குழு செயலாளர்களில் ஒருவராக இருந்த ம.கமலநாதன்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் ஈடுபட்டு, சிறைவாசம் அனுபவித்தவர். மிசா காலத்தில் ஓராண்டு சிறைக் கொடுமையில் இருந்தவர். 'முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சி' எனப் போற்றப்படும் முரசொலி மாறன் அவர்களின் உற்றநண்பராக, நாடாளுமன்றத்தில் 'கழகக் குரல்' எழுப்பியவர். 1968-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில், "மாநில அளவில் பொதுப்பணித்துறை இருக்கும்போது, ஒன்றிய அரசுக்கு ஏன் பொதுப்பணித்துறை?" என அவர் எழுப்பிய கேள்வி அதிர்வுகளை ஏற்படுத்தியது. "ஒன்றிய அரசு இரட்டை ஆட்சி முறையை நடத்தக்கூடாது" என அவர் எழுப்பிய கேள்வியை, 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 27, 'நம்நாடு' இதழ் பதிவு செய்துள்ளது.

நாடாளுமன்றப் பொறுப்புக்குப் பின்னர், கழகத்தின் களப்பணிகளில் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார். கிருஷ்ணகிரி நகரச் செயலாளர், தலைமைப் பொதுக்குழு, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தலைமை ஆட்சிமன்றக் குழு உறுப்பினராகவும் கழகப் பணியில் தீவிரம் காட்டினார். அஞ்சூர் கூட்டுறவு சங்கத் தலைவர், தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவராகவும் சிறப்பாக செயல்பட்டு பெயரெடுத்தவர்.

1997-ஆம் ஆண்டுவாக்கில், உடல்நலம் பாதிக்கப்பட்டு, சென்னையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், ஆகஸ்ட் மாதம் 17-ஆம் தேதி சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார்.

"கமலநாதன் மறைவு, இதயத்தில் ஈட்டி பாய்ச்சுவதாக" இரங்கல் கடிதம் எழுதிய கலைஞர், "கழகத் தலைமை இட்ட கட்டளை களை ஏற்று, களங்கள் பலவற்றைக் கண்ட அவரது இலட்சியப் பற்று என்றுமே மறக்க முடியாதது" என அவரின் நினைவைப் போற்றியிருப்பார். அந்தக் கடிதம் கமலநாதனுக்கு இரங்கல் கடிதம் மட்டுமல்ல; களத்தில் நின்றவரின் கழகப் பற்றை ஊருக்குப் பறை சாற்றும் கடிதமாகவும் அமைந்திருந்தது. களத்தில் நிற்போரை கழகம் என்றென்றும் மறக்காது என்பதற்கும், கலைஞரின் கடிதமே சான்று!

...துடிக்கும்

## ஏர் இந்தியா விமானப் பயணம் - ஓர் அனுபவ பகிர்வு!

தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக, நடந்த ஏர்இந்தியா விமான விபத்து உலகளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் ஏர் இந்தியா விமானங்களின் பராமரிப்பு குறித்து சர்வதேசப் பயணியாகத் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார் தமிழ்நாட்டைச் சேர்ந்த சக்திவேல் என்பவர்,

"கடந்த ஓர் ஆண்டில், அதாவது மே 2024 தொடங்கி ஜூன் 2025 வரையில், ஆறு முறை ஏர் இந்தியா விமானத்தைப் பயன்படுத்தி யிருக்கிறேன். சென்னையிலிருந்து டெல்லி வழியாக டோக்கியோவும், மீண்டும் டோக்கியோவிலிருந்து டெல்லி வழியாக சென்னைக்கும்.. மேலும் சென்னையிலிருந்து டெல்லி வழியாக இன்ஜியானுக்கும் என.. ஆறு முறை ஏறி இறங்கியிருக்கிறேன். இவற்றுள் ஒருமுறை கூட நல்ல பயண அனுபவம் கிடைக்கவில்லை ஜப்பான், கொரியா, தைவான், சைனா என பல ஆசிய நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து, குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து பயணிக்கிறோம் என்றால், நமக்கு பல்வேறுபட்ட விமான சேவைகளை பயன்படுத்தும் வாய்ப்புகள் உண்டு. கேத்தே பசிபிக், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், மலேசியன் ஏர்லைன்ஸ்... இன்னும் பல.. ஆனால், சில தவிர்க்கமுடியாத காரணங்களால், ஏர் இந்தியாவில் தேவையின்றி டெல்லிக்கு சென்று பின் மற்ற நாடுகளுக்கு பயணம் செய்யவேண்டியிருக்கிறது. இப்படியான மிக நீண்ட பயணத்தில், உணவு, உபசரிப்பு, இருக்கை அமைப்பு, பொழுதுபோக்கு என அனைத்தும் சிறப்பாக இருத்தல் மிக முக்கியம். ஆனால், ஏர் இந்தியாவின் நிலை என்ன தெரியுமா? இதில் ஒன்று கூட சிறப்பாக இருப்பதில்லை. சிலவேளைகளில் குளிரூட்டிகளும் சரியாக இயங்குவதில்லை. தரையிலிருந்து புறப்படும் விமானத்தில், சிறிது நேரத்தில் சிலசில பகுதிகள் ஆடிக்கொண்டேயிருக்கும். நம்மை ஒரு மரண பீதியில் வைத்திருக்கும் அளவிற்கு உள் கட்டுமான பராமரிப்பு நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கும்.

எனக்கு நேர்ந்த கசப்பான அனுபவங்கள்தான் இதை எழுதவைக்கிறது.நான் இப்பொழுது ஏர் இந்தியாவைப் பற்றியோ, இந்தியாவைப் பற்றியோ கவலைப்படுவதை விட இந்தியர்களைப் பற்றியே கவலை கொள்கிறேன்" என்கிறது அவரது முகநூல் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்





சி.என்.அண்ணாதுரை

### சம்பந்தி இல்லத் திருமணம்!

ஒருங்கிணைந்த நெல்லை - தூத்துக்குடி மாவட்ட தி.மு.க.வின் மூத்த முன்னோடி எனது தாத்தா 'மிசா' எஸ்.சித்திரைவேல் அவர்கள், 1965-இல் தூத்துக்குடி நகரசபை உறுப்பினராகச் செயல்பட்டவர். அன்றைய கழக மாநாடுகளில் குதிரையில் அணிவகுத்து வருவார். அவசர நிலை காலத்தில் பாளை சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர். இவரது மகன் மாவட்டப் பிரதிநிதி - தூத்துக்குடி நகரசபை உறுப்பினர் எனது தந்தை சி.நடராஜன் ஏற்பாட்டில், எஸ். சித்திரைவேல், மகள் சுந்தரகனி - கிளைக் கழகச் செயலாளர் ஞானராஜ் திருமணம் 1980-ஆம் ஆண்டு அக்டோபர் 3-ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், தூத்துக்குடியில் எங்களது இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பேசிய தலைவர் கலைஞர், இது எனது சம்பந்தி சித்திரைவேல் இல்லத் திருமணம் எனப் புகழ்ந்து பேசினார்கள்.

**- சி.என்.அண்ணாதுரை, தொகுதி ஒருங்கிணைப்பாளர், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி, தூத்துக்குடி வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### அண்ணா பிறந்த நாள் பட்டிமன்றம்!

1996-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி அண்ணாவின் 88-வது பிறந்த நாளையொட்டி, அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில், அண்ணாவிடம் விஞ்சியிருப்பது, 'அரசியல் விவேகமா? மனிதநேயமா?' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இன்றைய கழகத் தலைவர் தொடங்கிவைத்த இந்தப் பட்டிமன்றத்திற்கு, பொதுச் செயலாளர் துரைமுருகன் நடுவராக இருந்தார். 'அரசியல் விவேகம்' என்ற தலைப்பில், வெற்றிகொண்டான், கோ.வி.செழியன் ஆகியோரும், 'மனித நேயமே' என்ற தலைப்பில் புலவர் ஆடலரசு, நெல்லிக்குப்பம் புகழேந்தி ஆகியோரும் பேசினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131